**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஆத்தூர்**

**முன்னிலை: திரு.S. அன்புதாசன், பி.காம்., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், ஆத்தூர்**

**2025 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 26 ஆம் நாள் புதன்கிழமை**

**I.A. No. 03/2025 in O.S. No.189/2019**

1. ஜி.சுப்பையா (இறப்பு)
2. திருமதி.பி.வி.என்.சுபா(இறப்பு)
3. திலகவதி
4. நாகசுஜாதா
5. தாமோதரராஜ்
6. P.V.நடராஜன்
7. மைனர்.விஜய சரவணா
   (மேற்படி மைனர் 7ம் வாதிக்கு தகப்பனாரும் கார்டியனுமான 6ம் வாதி மூலம்)

...... மனுதாரர்கள்/வாதிகள்

/ எதிர்/

1. S.முத்தையா(இறப்பு)
2. பாப்பாத்தி
3. கோவிந்தராஜ்

..... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் இறுதியாக இன்று(26.11.2025) இந்நீதிமன்ற விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.ரவிச்சந்திரன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் அழைத்தும் ஆஜரில்லாததால் தோன்றாதரப்பினராக்கப்பட்டும், மனு மற்றும் வழக்கு ஆவணங்களைப்

பரிசீலித்தும் இந்நீதிமன்றம் வழங்கும்.

## <u>உத்தரவு</u>

அசல்வழக்கில் 7ம் வாதி மேஜராகிவிட்டதால் மேற்படியாரை மேஜராக விளம்புகை செய்து கொண்டு வழக்கை மேல்நடத்த அனுமதித்து உத்தரவிட வேண்டி கட்டளை 32 விதி 12 மற்றும் சி.பி.சி. 151 – ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1) **<u>மனுவுரை சுருக்கம்</u>**

1. அசல்வழக்கில் இம்மனுதாரர் 3ம் வாதி, மற்ற மனுதாரர்களுக்கும் சேர்த்து இம்மனுவை தாக்கல் செய்கிறார். எதிர்மனுதாரர்கள் மீது விளம்புகை, நிரந்தரஉறுத்துக்கட்டளை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது. மேற்படி வழக்கு தாக்கல் செய்யும்பொழுது 7ம் மனுதாரர்/7ம் வாதி மைனராக இருந்துள்ளார். தற்போது இம்மனுதாரர் மேஜராகிவிட்டார். தற்போது இம்மனுதாரருக்கு வயது 19 ஆகிறது. எனவே, 7ம் மனுதாரர்/7ம் வாதியை மேஜராக விளம்புகை செய்துகொண்டு வழக்கை மேல் நடத்த அனுமதித்து உத்தரவிட வேண்டுமென்று பரிகாரம் கோரப்பட்டுள்ளது.

2) எதிர்மனுதாரர்கள் தரப்பில் அழைத்தும் ஆஜரில்லாததால் தோன்றாதரப்பினராக்கப்பட்டுள்ளார்கள்.

3) இனி தீர்மானிக்க வேண்டியது யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

4). **தீர்வு**

i) மனு மற்றும் வழக்குக் கோப்பினைப் பரிசீலனை செய்ததில், அசல்வழக்கானது மனுதாரர்கள்/ வாதிகளால் எதிர்மனுதாரர்கள் மீது விளம்புகை, நிரந்தரஉறுத்துக்கட்டளை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வரும் நிலையில், வழக்கு தாக்கல் செய்யும்பொழுது 7ம் மனுதாரர் மைனராக இருந்துள்ளார் என்பதும், தற்போது 7ம் மனுதாரர் மேஜராகிவிட்டார் எனவும், 7ம் மனுதார்/7ம் வாதியை மேஜர் ஆக விளம்புகை செய்து இம்மனுவை அனுமதிப்பதுதான் நீதியின் பால் உகந்தது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

ii) **முடிவாக**, இம்மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்ட பின்னர் 2025ம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SUBRAMANIYAN ANBUTHASAN
Digitally signed by SUBRAMANIYAN ANBUTHASAN
Date: 2025.11.30 11:52:49 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர் ஆத்தூர்.